பிரஸார்பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

21 07 2024 **SUNDAY** **6.30 PM**

<u>மாநில செய்திகள் -</u>

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத்தொடரில் அனைத்து பிரச்சினைகள் குறித்தும் திறந்த மனதுடன் விவாதிக்க மத்திய அரசு தயாராக உள்ளது என்று நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் திரு கிரண் ரிஜிஜு தெரிவித்துள்ளார்.

2. தமிழகத்திற்கான மெட்ரோ மற்றும் புதிய ரயில் திட்டங்களுக்கு மத்திய பட்ஜெட்டில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும் என்று முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் கேட்டுக்கொண்டுள்ளார்.

3. ரப்பர் தோட்டக் தொழிலாளர்களுக்கான குறைந்தபட்ச தின ஊதியம் 630 ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது என்று மாநில அமைச்சர் திரு மதிவேந்தன் தெரிவித்துள்ளார்.

4. காவிரி நீர்பிடிப்புப்பகுதிகளில் பெய்துவரும் கனமழை காரணமாக, மேட்டூர் அணைக்கு நீர்வரத்து 57 ஆயிரம் கனஅடியாக அதிகரித்துள்ளது.

5. ஆசிய கோப்பை மகளிர் டுவென்டி – டுவென்டி கிரிக்கெட் போட்டியில் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் அணிக்கு எதிரான ஆட்டத்தில் இந்தியா 78 ரன் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

<u>*--இனி விரிவான செய்திகள்----*</u>

<<<<<>>>>>

நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத்தொடரில் அனைத்து பிரச்சினைகள் குறித்தும் திறந்த மனதுடன் விவாதிக்க மத்திய அரசு தயாராக உள்ளது என்று நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் திரு கிரண் ரிஜிஜு தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத்தொடரையொட்டி, இன்று புதுதில்லியில் நடைபெற்ற அனைத்துக்கட்சி கூட்டத்திற்குபின், செய்தியாளர்களிடம் பேசிய அவர், நாடாளுமன்ற நடவடிக்கைகளை சுமூகமாக நடத்தி செல்வதில் அரசுக்கும், எதிர்க்கட்சிகளுக்கும் பொறுப்பு உண்டு என்று குறிப்பிட்டார்.

இரு அவைகளிலும் உறுப்பினர்கள் ஆக்கப்பூர்வமான ஆலோசனைகளை அரசுக்கு வழங்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

அனைத்துக்கட்சியினரும் இந்த கூட்டத்தொடரை சுமூகமாக நடத்தி செல்ல ஒத்துழைப்பு தர வேண்டும் என்றும் திரு கிரண் ரிஜிஜு கூறினார்.

இன்று நடைபெற்ற அனைத்துக்கட்சி கூட்டத்தில், மத்திய அமைச்சர்கள் திரு ராஜ்நாத் சிங், திரு கிரண் ரிஜிஜு, திரு அர்ஜுன் ராம் மெக்வால், திரு ஜெ பி நட்டா, திரு சிராக் பாஸ்வான், திரு ராம்தாஸ் அத்வாலே ஆகியோரும், காங்கிரஸ் தலைவர்கள் திரு ஜெய்ராம் ரமேஷ்,

திரு கௌரவ் கோகோய், தேசியவாத காங்கிரஸ் கட்சி சார்பில் திரு பிரபுஃல் பட்டேல், திமுக சார்பில் திரு டி ஆர் பாலு, திரு திருச்சி சிவா, ஆம் ஆத்மி கட்சி சார்பில் திரு சஞ்சய் சிங், **AIMIM** கட்சியின் திரு அசாதுதின் ஒவைசி உள்ளிட்டோரும் கலந்துகொண்டனர்.

நாளை தொடங்கும் பட்ஜெட் கூட்டத்தொடரின் முதல் நாளன்று மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் பொருளாதார ஆய்வறிக்கையை சமர்ப்பிக்க உள்ளார்.

நாட்டின் பல்வேறு துறைகளின் வளர்ச்சி, ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சி, பணவீக்கத்தின் தாக்கம், வேலைவாய்ப்பு உள்ளிட்ட முக்கிய தகவல்கள் இதில் இடம்பெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

நாளை மறுநாள் நிதியமைச்சர் மக்களவையில் 2024-25-ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையை தாக்கல் செய்கிறார்.

பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான அரசு மூன்றாவது முறையாக பதவியேற்றபின்னர் தாக்கல் செய்யப்படும் முதல் பட்ஜெட் இது என்பது குறிப்பிடத்தக்கது.

<<<<<>>>>>>

தமிழக மக்களின் எதிர்பார்ப்பை மத்திய பட்ஜெட் பூர்த்தி செய்யும் என்று நம்புவதாக முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இக்கருத்தை பதிவிட்டுள்ள அவர், மெட்ரோ ரயில் திட்டத்திற்கான நிதி விடுவிக்கப்பட வேண்டும் என்று கூறியுள்ளார்.

தாம்பரம் - செங்கல்பட்டு இடையே மேம்பால விரைவுச் சாலைத்திட்டத்திற்கு ஒப்புதல் அளிக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

கோவை மற்றும் மதுரை மெட்ரோ ரயில் திட்டங்கள் மற்றும் தமிழகத்திற்கான இதர ரயில்வே திட்டங்களுக்கும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும் என்றும் திரு மு.க.ஸ்டாலின் கோரிக்கை விடுத்துள்ளார்.

<<<<<>>>>>>

தமிழகத்தில் போதைப்பொருள் புழக்கத்தை தடுக்க ஆளும் திமுக அரசு தவறிவிட்டதாக அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.

சேலம் மாவட்டம் ஓமலூரில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், தமிழகத்தில் அதிக அளவில் கொலை சம்பவங்கள் நடந்து வருவதாக குற்றம் சாட்டினார்.

கல்லூரி மற்றும் பள்ளிகளுக்கு அருகாமையிலேயே போதைப்பொருட்கள் விற்கப்படுவதாகவும் அவர் கூறினார்.

கடந்த ஆட்சிக்காலத்தில் தொடங்கப்பட்ட அம்மா உணவகத்தின் மூலம், பொதுமக்கள் பயன்பெறும் வகையில் தரமான உணவு, மலிவான விலையில் வழங்கப்பட்டதாக தெரிவித்தார்.

திமுக ஆட்சிக்கு வந்தபின், தரமற்ற பொருட்கள் விநியோகிக்கப்பட்டு, பணியாளர்களின் எண்ணிக்கையும் குறைக்கப்பட்டு, 19-க்கும் மேற்பட்ட இடங்களில் அம்மா உணவகங்கள் மூடப்பட்டதாகவும் திரு எடப்பாடி பழனிசாமி கூறினார்.

<<<<<>>>>>>

ரப்பர் தோட்டக் தொழிலாளர்களுக்கான குறைந்தபட்ச தின ஊதியம் 630 ரூபாயாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது என்று மாநில வனத்துறை அமைச்சர் திரு மதிவேந்தன் தெரிவித்துள்ளார்.

கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவிலில் ரப்பர் கழக தொழிலாளர்களுடன் நடத்திய பேச்சு வார்த்தையில், அரசு ரப்பர் கழகத்தின் கட்டுப்பாட்டில் இயங்கிவரும் தோட்டங்களில் பணியாற்றும் நான்காயிரத்திற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் பயன்பெறும் வகையில் சுமூகமான உடன்பாடு எட்டப்பட்டிருப்பதாக தெரிவித்துள்ளார்.

*(சவுண்ட் பைட் - மதிவேந்தன் - 46 செகண்ட்ஸ்)*

<<<<<>>>>>>

காவிரி நீர்பிடிப்புப்பகுதிகளில் பெய்துவரும் கனமழை காரணமாக, கர்நாடகாவில் உள்ள கபினி, கிருஷ்ணராஜசாகர் உள்ளிட்ட அணைகள் வேகமாக நிரம்பி வருகின்றன.

இந்த இரு அணைகளிலிலும் இருந்து 86 ஆயிரம் கனஅடி தண்ணீர் திறந்துவிடப்பட்டுள்ளது.

இதனையடுத்து, தமிழக எல்லைக்கு வரும் காவிரி தண்ணீரின் அளவு அதிகரிக்கும் என்று எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*(வாய்ஸ் பைட் - தண்டபாணி – 60 செகண்ட்ஸ்)*

காவிரி நீர்பிடிப்புப்பகுதிகளில் பெய்துவரும் கனமழை காரணமாக, மேட்டூர் அணைக்கு வரும் நீரின் அளவு தொடர்ந்து அதிகரித்து வருகிறது.

இன்று மாலை நான்கு மணி நிலவரப்படி 57 ஆயிரத்து 409 கனஅடியாக அதிகரித்துள்ளது.

அணையின் நீர்மட்டம் 70 புள்ளி எட்டு பூஜ்யம் அடியாக உள்ளது.

<<<<<>>>>>>

மேற்கு திசை காற்றின் வேக மாறுபாடு காரணமாக தமிழகத்தின் ஓரிரு இடங்களில் இன்றும், நாளையும் மிதமான மழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

மாநிலத்தில் வரும் 27-ஆம் தேதிவரை ஓரிரு இடங்களில் மிதமான மழை தொடர்வதற்கு வாய்ப்புள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இன்று முதல், வரும் ஐந்து நாட்களுக்கு மன்னார் வளைகுடா மற்றும் அதனையொட்டியுள்ள தென்தமிழக கடலோரப்பகுதிகள் மற்றும் குமரிக்கடல் பகுதிகளில் மணிக்கு 45 கிலோமீட்டர் வேகத்தில் அவ்வப்போது 55 கிலோமீட்டர் வேகத்திலும் சூறாவளி காற்று வீசக்கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<>>>>>

*மாவட்டச் செய்திகள்*

சென்னை மாநகராட்சி சார்பில் நடைபெற்றுவரும் பல்வேறு வளர்ச்சித் திட்டப்பணிகளை மாநில அமைச்சர் திரு சேகர்பாபு இன்று நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

--------

சென்னை மெட்ரோ ரயில் திட்டத்தின் இரண்டாம் கட்டப்பணிகள் நடைபெற்றுவரும் ராயப்பேட்டை, ஆலப்பாக்கம், பூந்தமல்லி ஆகிய பகுதிகளை மாநில அமைச்சர் திரு உதயநிதி ஸ்டாலின் இன்று ஆய்வு செய்தார்.

----------------

காஞ்சிபுரம் மாவட்டம் குன்றத்தூர் வட்டத்தில் வரும் புதன்கிழமை நடைபெறும் உங்களைத் தேடி உங்கள் ஊரில் திட்டத்தில் பொதுமக்கள் மாலை நான்கரை மணிமுதல், ஆறு மணி வரை வட்டாட்சியர் அலுவலகத்தில் மனு அளிக்கலாம் என ஆட்சியர் திருமதி கலைச்செல்வி மோகன் தெரிவித்துள்ளார்.

-----------

நாமக்கல் மாவட்டம் கொல்லிமலையில் விடுமுறை தினத்தை முன்னிட்டு, சுற்றுலாப்பயணிகள் கூட்டம் இன்று அதிகரித்து காணப்பட்டது.

------

தென்காசி மாவட்டம் சங்கரன்கோவில் சங்கர நாராயண சுவாமி திருக்கோவிலில் ஆடித்தபசு திருவிழாவையொட்டி, மாநிலத்தின் பல்வேறு

பகுதிகளில் இருந்து லட்சக்கணக்கான பக்தர்கள் இன்று சாமி தரிசனம் செய்தனர்.

<<<<<>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

ஆசிய கோப்பை மகளிர் டுவெண்டி – டுவெண்டி கிரிக்கெட் போட்டியில் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் அணிக்கு எதிரான ஆட்டத்தில் இந்தியா 78 ரன் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

இலங்கையின் **Dambulla-**வில் நடைபெற்ற இப்போட்டியில், முதலில் பேட் செய்த இந்தியா 5 விக்கெட் இழப்பிற்கு 201 ரன் எடுத்தது.

அதிகபட்சமாக ஹர்மன்பிரீத் கவுர் 66 ரன் எடுத்ததார்.

ரிச்சா கோஷ் 64 ரன்னுடன் ஆட்டமிழக்காமல் இருந்தார்.

202 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் களமிறங்கிய ஐக்கிய அரபு எமிரேட்ஸ், நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் ஏழு விக்கெட் இழப்பிற்கு 123 ரன் மட்டுமே எடுத்து தோல்வியடைந்தது.

<<<<<END>>>>>>